<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>

<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>

<u>முதன்மை சார்பு  நீதிபதி.</u>

**<u>MCOP. No. 243/2024</u>**

ம.சா. 1 தேதி.21.01.2026.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நாராயணமூர்த்தி | த/பெ, | பாவாடை |
| வயது | 45 | தொழில் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் இந்த மனுவில் மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தட்டச்சு செய்யப்பட்டது.

எனது தரப்பில் ஆவணங்களாக 15.09.2023 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை நகல் **ம.சா.ஆ.1** ஆகவும், 19.11.2014 தேதியிட்ட TN 48 AS 6647 வாகன பதிவேடு நகல் **ம.சா.ஆ.2** ஆகவும், 10.11.2022 தேதியிட்ட TN 48 AS 6647 வாகன காப்பீட்டு நகல் **ம.சா.ஆ.3** ஆகவும், 12.04.2017 தேதியிட்ட ஓட்டுநர் உரிமம் நகல் **ம.சா.ஆ.4** ஆகவும், 15.09.2023 தேதியிட்ட விபத்து பதிவேடு நகல் **ம.சா.ஆ.5** ஆகவும், மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் மற்றும் ஆதார் அடையாள அட்டை நகல் **ம.சா.ஆ.6** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.